Edelweiss
Mutual Fund



# மியூசுவல் ஃபண்ட்

## சேமிப்புக்கான புதிய வழிமுறை

AMFI

# முன்பொரு 
# காலத்தில்....

இது சுரேஷ் என்பவருடைய கதை, மும்பையில் ஒரு மென்பொருள் நிறுவனத்தில் கிட்டத்தட்ட 5 ஆண்டு காலம் பணி புரிந்தார். தன்னுடைய மொத்த வாழ்க்கையையும் மும்பையில் கழித்த சுரேஷ் நகரத்தின் புற வாழ்க்கை பற்றி அறிந்திருக்க வில்லை. இருப்பினும், கடந்த சில மாதங்களாக, சுரேஷ் காரணம் காட்டி விளக்க முடியாத அளவிற்கு விவசாயத்தில் அதிக ஆர்வம் உடையவராக இருக்கிறார். கடந்த முறை குடும்பத்துடன் நாசிக்கிற்கு சென்று வந்தார். அங்கு பரந்து செழித்து காணப்பட்ட திராட்சைத் தோட்டத்தில் மனத்தை பறிகொடுத்தார். தானும் திராட்சை பயிரிட்டு பணம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணினார். ஆகவே, சுரேஷ் தன்னிடமிருந்த அறிவையும் வளங்களையும் வைத்துக் கொண்டு , திராட்சை விதைகளை வாங்கி திராட்சை சாகுபடியில் இறங்கினார். இருப்பினும் அனுபவமின்மை காரணமாக பெரும் நஷ்டத்தை சந்திக்க வேண்டி இருந்தது. அவர் தனக்குள் சொல்லிக் கொண்டார் விவசாயம் மிகவும் மோசமானது, ஒரு விவசாயியாக இருந்து யாரும் பணம் பார்க்க முடியாது...

**சுரேஷ் போன்று, உண்மையை சரியாக புரிந்து கொள்ளாமல் பலர் பொருளாதார சந்தையில் முதலீடு செய்கிறார்கள். தோல்வியுற்ற அனுபவங்களாலும், முற்றிலுமாக புரிந்துகொள்ளாத தன்மையினாலும் பல கட்டுக்கதைகள் பிறக்கின்றன. இது நம்முடைய புரொஃபைலுக்கு பொருந்தாத உபகரணங்கள் மூலம் முதலீடு செய்ய வழிவகுக்கிறது. இதன் விளைவாக வாழ்நாள் முழுவதும் பொருளாதார சந்தை குறித்து ஒரு தவறான கண்ணோட்டத்தையே உருவாக்கிக் கொள்கிறோம்.**

மியூசுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை இடர்பாடுகளுக்கு உட்பட்டவையாகும்.
தயவுசெய்து முதலீடு செய்யும் முன்பு திட்ட தகவல் ஆவணம் மற்றும் கூடுதல் தகவலின் அறிக்கையை கவனமாகப் படிக்கவும்.



...மீண்டும் சுரேஷ் கதைக்கே வருவோம். அவர் ஒத்த ஆர்வம் கொண்ட இன்னும் சிலரை ஈடுபடச்செய்து, விவசாயம் குறித்து புரிந்து கொள்ளக்கூடிய தொழில் நிபுணர்கள் சிலரை கூலிக்கு அமர்த்தி இருந்தால், அப்போது அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிபுணர்களின் அனுபவத்தை பயன்படுத்தி தங்களுடைய கனவுகளை மெய்ப்படச் செய்திருக்கலாம், நல்ல லாபமும் ஈட்டி இருக்கலாம். உறுப்பினர்களிடமிருந்து திரட்டிய பணத்தை குவித்து முதலீடு செய்வதன் மூலம் மற்றும் நிபுணர்களைக் கொண்டு அன்றாட செயல்பாடுகளை சமாளிப்பதன் மூலம் செய்ய முடியும். உண்மையில், கனவின் மதிப்புக்கு ஏற்ப பணம் முதலீடு செய்திருக்கலாம். அவ்வாறே, சிலர் நீண்ட கால முதலீடு மூலம் வருவாய் ஈட்ட எண்ணலாம், அப்போது அவர்கள் தங்களுடைய இலக்குகள் மற்றும் கால எல்லைக்கு ஏற்ப பொருத்தமான முதலீட்டை தேர்ந்தெடுக்கலாம். மியூசுவல் ஃபண்டுகள் மக்களிடமிருந்து பெற்ற பணத்தை அவர்களுடைய நோக்கத்திற்கு ஏற்ப முதலீடு செய்கிறது. இங்கு நினைவில் கொள்ள வேண்டியது தேர்வு இலக்குகள் மற்றும் கால எல்லை சார்ந்துள்ளது.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

# மியூசுவல் ஃபண்ட் கருத்தாக்கம்

## 01

பொதுவான பொருளாதார நோக்கமுடைய முதலீட்டாளர்கள் தங்களுடைய பணத்தை முதலீடு செய்கிறார்கள்.

## 02

முதலீட்டாளர்கள், விகிதாச்சார அடிப்படையில், முதலீடு செய்ய பங்களித்த தொகைக்காக மியூசுவல் ஃபண்ட் யூனிட்களைப் பெறுவார்கள்.

## 03

முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டப்பட்ட பணம் பங்குகள், டிபெஞ்சர்கள் மற்றும் இதர செக்யூரிடீஸ்களில் ஃபண்ட் மேனேஜரால் முதலீடு செய்யப்படுகிறது.

## 04

ஃபண்ட் மேனேஜர் ஆதாயங்களையும் இழப்புகளையும் தெளிவாக புரிந்து கொள்கிறார் மற்றும் டிவிடெண்ட் அல்லது வட்டி வருவாயை பெற்றுக் கொள்கிறார்.

## 05

இத்தகைய முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட மூலதன ஆதாயங்கள் அல்லது நஷ்டங்கள் முதலீட்டாளர்கள் வைத்துக் கொண்டுள்ள யூனிட்களின் எண்ணிக்கையின் விகிதாச்சாரத்தின் படி பகிர்ந்தளிக்கப்படுகிறது.



**தங்களுடைய சொந்த முதலீடுகள் குறித்து போதிய அனுபவமோ அல்லது நேரமோ இல்லாதவர்களுக்கு மியூசுவல் ஃபண்டுகளே சிறந்த சாதனமாகும்.**

மியூசுவல் ஃபண்டின் கருத்தாக்கம் ஒரு பொதுவான நோக்கத்தை மனத்தில் கொண்டு வளங்களை முதலீடு செய்வதன் மூலம் வேலை செய்கிறது. அதாவது, ஒரு மியூசுவல் ஃபண்ட் எண்ணற்ற முதலீட்டாளர்களால் இணைந்து முதலீடு செய்யப்பட்ட பணத்தினால் ஆனது எனலாம். அவர்களுடைய பணம் பங்குகள் மற்றும்/அல்லது பாண்டுகள்/கம்மாடிடீஸ் போன்ற இதர நிதிசார் சாதனங்களில் முதலீடு செய்ய ஒரு தொழில்துறை நிபுணரிடம் (ஃபண்ட் மேனேஜர் என்று குறிக்கப்படுகிறது) அளிக்கப்படுகிறது. மியூசுவல் ஃபண்ட் திட்டத்தின் குறிக்கோள் ஒரு மியூசுவல் ஃபண்ட் நிறுவனத்தினால், அதாவது அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனியினால் (AMC) தெளிவாக வரையறுக்கப்பட்டு விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எளிமையான வார்த்தைகளில் குறிப்பிடப்பட வேண்டும் என்றால், மியூசுவல் ஃபண்டை ஒரு கம்பெனியாக கொள்ளலாம், அது மக்களை ஒன்றிணைக்கிறது, மற்றும் அவர்களுடைய பணத்தை பங்குகள், பாண்டுகள், மற்றும் இதர செக்யூரிடீஸில் முதலீடு செய்கிறது. ஒவ்வொரு முதலீட்டாளரும் யூனிட்களை உடைமை ஆக்கிக்கொள்கிறார், இது அந்தந்த முதலீட்டாளரால் முதலீடு செய்யப்பட்ட தொகையின் அடிப்படையில், வைத்திருக்கும் ஃபண்டின் பகுதியை குறிக்கிறது.

# மியூசுவல் ஃபண்ட் : ஒரு புதிய அவதாரத்தில் சேமிப்பு

ஒவ்வொரு மியூசுவல் ஃபண்டும் ஒரு ஃபண்ட் மேனேஜரால் நிர்வகிக்கப்படுகிறது, அவர் தனது முதலீட்டு நிர்வாகத் திறமையை மற்றும் தேவையான ஆராய்ச்சி பணியை பயன்படுத்தி, ஒரு முதலீட்டாளர் சுயமாக நிர்வகிப்பதைக்காட்டிலும் சிறந்த லாபத்தை பெற்றுத்தரக்கூடிய திறனுடையவாராய் இருக்கிறார். மூலதன ஆதாயம் மற்றும் இந்த முதலீட்டிலிருந்து பெறப்பட்ட இதர வருவாய்கள் முதலீட்டாளர்களுக்கு (யூனிட்தாரர்கள் என்று அழைக்கப்படுகிறது) அவர்கள் வைத்திருக்கும் யூனிட்களின் விகிதாச்சார அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. சுருக்கமாக சொன்னால், **மியூசுவல் ஃபண்டுகள் சேமிப்பின் புதிய வழிமுறை ஆகும்.** நாம் இந்த யூனிட்களின் கருத்தாக்கத்தை சிறந்த முறையில் புரிந்து கொள்ளுவோம்.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

மியூசுவல் ஃபண்டுகள் ஃபண்டின் முதலீட்டு நோக்கங்களுக்கு மற்றும் முதலீட்டாளர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டதற்கு இணங்க, முதலீட்டாளர்களிடமிருந்து பணம் திரட்டுவதற்கு, வெவ்வேறு சந்தைகளில் மற்றும் செக்யூரிடீஸில் முதலீடுசெய்ய ஒரு சிறந்த சாதனம் ஆகும்.

# யூனிட்ஸ். சிறியது ஆனால் சக்திமிக்க சாதனம்

ஒரு யூனிட் என்பது பரந்த வரையறைக்கு உட்பட்டு பார்க்குமிடத்து, மாற்றுக்காக ஒரு தரஅளவாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அளவு. இதனை ஓர் எடுத்துக்காட்டு மூலம் புரிந்து கொள்ளுவோம். ரூ.40 விலையுடைய சாக்லேட்டுகள் ஒரு பெட்டியில் இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். ஒரு பெட்டியில் ஒரு டஜன் சாக்லேட்டுகள் உள்ளன. நான்கு நண்பர்கள் அந்த சாக்லெட்டுகளை வாங்கிக் கொள்ள முடிவு செய்கிறார்கள், ஆனால் அவர்கள் ஒவ்வொருவரிடமும் ரூ.10 மட்டுமே உள்ளது. கடைக்காரர் பெட்டியாக மட்டுமே விற்பதற்கு தயாராக உள்ளார். இப்போது 4 நண்பர்களும் ஒவ்வொருவரும் ரூ.10 போட்டு ஒரு டஜன் சாக்லெட்டுகளை வாங்குகிறார்கள். அவர்களுடைய பங்களிப்புக்கு ஏற்ப ஒவ்வொருவரும் 3 சாக்லெட்டுக்களை பெற்றுக் கொள்கிறார்கள். ஒரு சாக்லேட் ஒரு யூனிட் என்று வைத்துக் கொள்ளுவோம், 12 சாக்லெட்டுகளின் விலை ரூ.40, இவ்வாறு ஒரு யூனிட் (சாக்லெட்) விலை ரூ.3.33 ஆகும்.

ஒவ்வொரு நண்பரும் ரூ. 10 பங்களித்தனர், எனவே அவர் 3 சாக்லெட்டுகளைப் பெற்றார் அதாவது 3 யூனிட்கள். அவ்வாறே மியூசுவல் ஃபண்டுகளில் ஒவ்வொரு முதலீட்டாளரும் அவர்/அவள் முதலீடு செய்த தொகைக்கு தக்கவாறு யூனிட்களின் எண்ணிக்கையை பெறுகிறார். இவ்வாறு மியூசுவல் ஃபண்டில் ஒரு பெரும்தொகையின் ஒரு பகுதி உரிமையாளராக விளங்குகிறார், ஒன்றுசேர்ந்து எல்லா யூனிட்தாரர்களால் உரிமை கொண்டாடப்படுகிறது.

**ஒரு மியூசுவல் ஃபண்ட் பங்குகள் அல்லது பாண்டுகளில் முதலீட்டு விருப்பத்தேர்வுக்கு மாற்று அல்ல; ஒரளவிற்கு பல முதலீட்டாளர்களின் சேமிப்பை திரட்டுகிறது மற்றும் இந்த பணம் பங்குகள், பாண்டுகள், பணச் சந்தை சாதனங்கள் மற்றும் இதர வகை செக்யூரிடீஸ்களில் முதலீடு செய்கிறது.**



ஒரு முதலீட்டாளராக ஒவ்வொருவரும் எதிர்பார்ப்பது இதுதான் : மாபெரும் சந்தைகளில் பங்கேற்பு, தொழில்துறை நிபுணத்துவ வழிகாட்டல், வசதி, வெளிப்படைத்தன்மை மற்றும் தேவைப்படும் போதெல்லாம் சேமிப்பை அணுகுதல். மியூசுவல் ஃபண்டின் பற்பல நன்மைகள் பற்றி மற்றும் மியூசுவல் ஃபண்ட் எவ்வாறு உன்னத முதலீடாக ஆற்றல் வாய்ந்ததாக இருக்கிறது என்று அறிந்து கொள்ளுவோம்.

# நன்மைகளை கணக்கிடுவோம்

## 1 போர்ட்ஃபோலியோ (‘முதலீட்டு கூடை’ படிக்கவும்) டைவர்ஸிஃபிகேஷன்

முன்னோர்கள் எப்போதும் நமக்கு சொல்லியுள்ளார்கள், ‘உங்களுடைய எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் வைக்கக் கூடாது’ என்று; மாற்றாக உங்களுடைய முதலீடுகளை வெவ்வேறு முதலீட்டு கூடைகளில் வைக்கவும், அதாவது பல்வகைப்படுத்தல். பல்வகைப்படுத்துதல் என்பது பணத்தை முதலீட்டின் பற்பல வெவ்வேறு முதலீடுகளில் பரவலாக்குதல். ஒரு முதலீட்டின் மதிப்பு குறையும்போது, மற்றொன்றின் மதிப்பு மேலே ஏறும். முதலீட்டு இருப்புகளின் பல்வகைப்படுத்தல் ஆபத்தை பெரும் அளவில் குறைக்கிறது. உண்மையில் இதைத்தான் மியூசுவல் ஃபண்ட்ஸ் செய்கிறது. மியூசுவல் ஃபண்ட்ஸ் பற்பல செக்யூரிடீஸ்களில் முதலீடு செய்கிறது, இவ்விதமாக ஒரு முதலீட்டாளராக நீங்கள் பலதரப்பட்ட முதலீட்டு கூடைகளைப் பெற முடியும். ஆகவே பாதுகாப்பை அதிகரித்துக் கொள்ள முடியும், அதனால் ஆபத்தை குறைத்துக் கொள்ள முடியும்.

## 2 ரொக்கமாக்கல்




சற்று கற்பனை செய்து பாருங்கள், உங்கள் மகளின் திருமணத்திற்காக நீண்ட நாட்களாக முதலீடு செய்து வந்துள்ளீர்கள் மற்றும் அது நல்ல லாபத்தையும் அளித்திருக்கிறது. இருப்பினும், அது உங்களுக்கு தேவையான நாள் அன்று உங்கள் பணத்தை திரும்ப பெற்றுக் கொள்ள முடியவில்லை. அதிக லாபம் கிடைத்து என்ன பயன். தேவையானபோது பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. உண்மையில், நமக்கு தேவையானபோது பணம் நமக்கு கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இதுவே ரொக்கமாக்கல் எனப்படுகிறது. நம்முடைய சேமிப்பு தேவையானபோது திரும்ப பெற்றுக் கொள்ளும்படி இருக்க வேண்டும். இதைத்தான் மியூசுவல் ஃபண்ட் உங்களுக்கு அளிக்கிறது - ரொக்கமாக்கல்.

## 3 குறைந்த ஆபத்து

முன்பு விவாதித்தபடி, பல்வகைப்படுத்தல் ஆபத்தை பெரும் அளவில் குறைக்கிறது. இருப்பினும், எந்த முதலீடுகளை வாங்க வேண்டும் அல்லது விற்க வேண்டும் என்று ஃபண்ட் மேனேஜர் முடிவு எடுக்கும்போது, முதலில் அவர்கள் பார்ப்பது அதில் உள்ள ஆபத்து, பின்னர்தான் லாபம். மற்ற நேரடி முதலீட்டு வகைகளுடன் ஒப்பிடுகையில் முதலீடு செய்யும் கருத்தாக்கதின் காரணமாக ஆபத்து பரவலாக்கப்படுகிறது மற்றும் பெரும் அளவு குறைக்கப்படுகிறது.

## 4 குறைந்த பரிவர்த்தனை செலவு

நாம் எதை மொத்த விற்பனையில் வாங்கினாலும் சில்லறை விலையில் வாங்குவதைக் காட்டிலும் நாம் சிறந்த விலையை பெறுகிறோம் என்பதை அறிந்ததே. இவ்வாறு பலர் தங்களுடைய சேமிப்புகளை முதலீடு செய்து தங்கள் சார்பாக பரிவர்த்தனை செய்ய மியூசுவல் ஃபண்டிற்கு அளிக்கிறார்கள். இதனால் மியூசுவல் ஃபண்டிற்கு பேரம்பேசும் பெரும் சக்தி கிடைக்கிறது, ஒட்டுமொத்த பரிவர்த்தனை செலவும் குறைகிறது.

## 5 தொழில்துறைரீதியான நிர்வாகம்

நாம் வீட்டில் நமது முடியை வெட்டிக்கொள்கிறோமா? பதில் வெளிப்படையானது 'இல்லை' என்பதுதான். நாம் முடிதிருத்தும் நிபுணரிடம் செல்கிறோம், நம்மைவிட அவர் சிறப்பாக வெட்டுவார் என்று நன்றாக புரிந்து வைத்திருக்கிறோம். அவ்வாறே மியூசுவல் ஃபண்டுகளில் உங்களுடைய பணம் ஒரு தொழில்துறை வல்லுனரால் நிர்வகிக்கப்படுகிறது, அவர் ஆராய்ச்சி பக்கபலமும் போக்குகளின் நெளிவுசுழிவுகளை புரிந்து கொண்டவராகவும் இருக்கிறார்.

## 6 திட்டங்களின் தேர்வு



நாம் பலவித காரணங்களுக்காக சேமிக்கிறோம்/முதலீடு செய்கிறோம். சிலர் சில ஆண்டுகளுக்கு பிறகு ஒரு வீடு வாங்குவதற்காக செய்யலாம், அல்லது இப்போதிலிருந்து 10 ஆண்டுகள் கழித்து மகளின் திருமணத்திற்காக செய்யலாம் அல்லது 20 ஆண்டுகளுக்குகப் பிறகு தனது பணி ஓய்வுக்காக இருக்கலாம். எவ்வாறாயினும் முதலீட்டின் நோக்கம் வெவ்வேறாக இருப்பதால் 'அனைவருக்கும் பொருந்தும் ஒரே அளவு' என்ற தத்துவத்திற்கு ஏற்ப சரிபட்டு வராது. இவ்வாறு, முதலீட்டு நோக்கம் சார்ந்து மற்றும் கால எல்லை சார்ந்து, ஒருவர் மியூசுவல் ஃபண்ட் திட்டங்களிலிருந்து ஒன்றை தேர்வு செய்யலாம்.

## 7 ஒளிவுமறைவு இன்மை மற்றும் பாதுகாப்பு

உங்களுடைய சேமிப்பை நீங்கள் வேறு ஒருவரிடம் ஒப்படைக்கும்போது, உங்கள் பணத்திற்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று அறிந்து கொள்ள விரும்ப மாட்டீர்களா? நிச்சயமாக, நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புவீர்கள். மியூசுவல் ஃபண்ட்ஸ் என்னும் நிலையில், பணம் தொழில்துறை நிபுணர்களால் ஃபண்ட் மேனேஜர்களால் கையாளப்படுகிறது, இந்த செய்முறை முற்றிலும் வெளிப்படையானது. உங்கள் பணம் எங்கே எவ்வாறு முதலீடு செய்யப்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்விதமான ஒளிவுமறைவு இன்மை தானாகவே உங்களுக்கு ஒரு பாதுகாப்பை அளிக்கிறது. இந்த வெளிப்படைத்தன்மை காரணமாக எல்லா விஷயங்கள் பற்றியும் (உங்களுடைய சேமிப்பு எங்கு முதலீடு செய்யப்படுகிறது, எவ்வளவு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது, முதலானவை) நீங்கள் அறிந்து கொள்ள முடிகிறது மற்றும் அது உங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றால் உங்களுடைய சேமிப்பை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் மற்றும் அதேபோல் அதை பாதுகாத்துக் கொள்ளவும் செய்யலாம்.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

## 8 இணக்கத்தன்மை

எல்லோரும் ஒரே வகையான வருவாய் அதேபோல் ஒரே வகையாக செலவு செய்தல் பெற்றிருக்க முடியாது. வருவாய் ஓட்டம் ஒரு தொழில் செய்பவர் மற்றும் ஊதியம் வாங்குபவர் இடையே வித்தியாசம் இருக்கும். அவ்வாறே முதலீட்டு சாதனம்/கூடை இணக்கமாக இருக்க வேண்டும் ஒருவருடைய வருவாய் ஓட்டத்திற்கிணங்க முதலீடு செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். பணம் தேவைப்படும்போதும் அதுதான் உண்மை. முன்பு கூறியவாறு மக்கள் வெவ்வேறு நோக்கம் கொண்டவர்களாக இருக்கிறார்கள், அதற்கேற்ப பணத்தை திரும்பப் பெற்றுக் கொள்ள நினைக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, ஒருவர் பணிஓய்வுக் காலத்திற்காக சேமித்திருக்கலாம்; எதிர்பாராமல் திடீரென்று வீட்டில் பெரிய மருத்துவ அவசர நிலை ஏற்பட்டு பணத்தை உடனடியாக எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகலாம்.



அந்த நேரத்தில் தேவைகளை எதிர் கொள்ளும் விதத்தில் முதலீடுகள் இணக்கமாக இருக்க வேண்டும். மியூசுவல் ஃபண்டுகள் முதலீடு செய்யும்போதும் அதேபோல் திரும்பப் பெற்றுக் கொள்ளும்போதும் இணக்கத்தன்மை அளிக்கிறது. எனவே உங்களுக்கு சரியான சிறந்த தேர்வாக அமைகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட பல விஷயங்களுள் முக்கிய ப்ளஸ் பாயின்டாக விளங்குவது ஒவ்வொரு நிலையிலும் கிடைக்கும் வசதி. அதாவது, உங்களுடைய இலக்குகளை நீங்கள் தீர்மானித்த நேரத்திலிருந்து, உண்மையான முதலீடு செய்த காலம் வரை, முதலீடு செய்திருந்த காலத்தின்போது முதல் உங்களுக்கு பணம் தேவைப்பட்டு எடுக்கும் காலம் வரை உங்களுடைய வசதி கவனத்தில் கொள்ளப்படுகிறது. இந்த பாயின்ட் குறித்து ஆழமாக ஆராய்வோம். உங்களுடைய இலக்குகளை நீங்கள் ஒரு முறை நிர்ணயித்து விட்டால் நீங்கள் ஆன்லைன் அல்லது ஆஃப்லைன் மூலம் முதலீடு செய்ய தேர்வு செய்யலாம், பணத்தை திரும்ப் பெற்றுக் கொள்ளும்போதும் அவ்வாறே செய்யலாம். இதை இந்த சிற்றேட்டின் பிற்பகுதியில் விரிவாகப் பார்க்கலாம்.



# கட்டுக்கதை

மியூசுவல் ஃபண்டுகள் நிபுணர்களுக்கானது.

# உண்மை

உண்மை முற்றிலும் மாறானது. ஈக்விட்டி மார்க்கெட் போல்அல்லாது, பங்குகளை நீங்கள் எப்போது வாங்க வேண்டும் அல்லது விற்க வேண்டும் என்று கவலைப்பட வேண்டியதில்லை. அதை ஃபண்ட் மேனேஜர் உங்கள் சார்பாக செய்திடுவார். வெவ்வேறு துறைகள் மற்றும் கம்பெனிகள் போக்கை அறிந்து, நீங்களும் மற்ற முதலீட்டாளர்களும் அவரிடம் அளித்த பணத்தை எதில் போட வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியதுதான் அவருடைய வேலை.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

# நினைவிருக்கட்டும் : எண்களுக்கு முன்பு இலக்குகள்

இதுவரை நாங்கள் இலக்குகள் பற்றியும் அவற்றை முதலீடுகளுடன் தொடர்பு படுத்தியும் நிறைய பேசி வந்திருப்பதை நீங்கள் பார்த்தீர்கள். உங்களிடம் ஏராளமான பணம் கொடுக்கப்பட்டுள்ளது என்று வைத்துக் கொள்ளுவோம்; இருந்தும் நீங்கள் எதற்காகவும் அல்லது எந்த இலக்குகளுக்காகவும் அதை செலவழிக்க அனுமதிக்கப்பட வில்லை, நீங்கள் முதலீடு செய்ய முடியாது, அல்லது கடன் வழங்க முடியாது அல்லது நன்கொடையாகவும் அளிக்க முடியாது. அப்போது அந்தப் பணத்தினால் உங்களுக்கு என்ன பயன்? நிச்சயமாக, பணத்தை ஒரு படுக்கையாக ஆக்கிக் கொண்டு அதன் மீது தூங்குவதைத் தவிர வேறு பயன் இல்லை. அல்லது அதனை அடுக்கி வைத்து அறையை பிரிப்பதற்காக பயன்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு பயன் இல்லை. விஷயம் என்னவென்றால் மனிதர்களாகிய நமக்கு உணர்வுகள்தான் முக்கியம், எண்கள் அல்ல. எடுத்துக்காட்டாக, நீங்கள் உங்கள் குடும்பத்துடன் ஒரு உணவகத்திற்கு சென்றால் எதிர்பார்ப்பது எதை அனுபவித்துச் சாப்பிட்டால் அவர்கள் முகத்தில் என்ன சந்தோஷத்தை வரவழைக்கும் என்பதுதான், உணவு/சூழல் மீது செலவழிக்கும் தொகையைப் பார்த்து ஒருவர் சந்தோஷம் அடையப்போவதில்லை.

**மனிதர்களாகிய நாம் ஒன்றை நன்கு புரிந்து கொள்ளுவோம், வருவாய் நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம் மற்றும் எண்களை நாம் புரிந்து கொள்ளமல் இருக்கலாம். நாம் நிச்சயமாக புரிந்து கொள்வது அத்துடன் இணைக்கப் பட்டுள்ள இலக்குகள். எடுத்து க்காட்டாக நீங்கள் உங்கள் குழந்தையின் கல்விக்காக சேமித்து/முதலீடு செய்து வைத்துள்ளீர்கள், நீங்கள் அக்கறை கொண்டுள்ள தெல்லாம் தேவையானபோது அது உங்களுக்கு கிடைக்குமா மற்றும் அது போதுமானதாக இருக்குமா என்பதுதான். இவ்விதமாக முதலில் உங்கள் இலக்குகளை காட்சிப்படுத்தி பின்னர் முதலீடு செய்ய முடிவு எடுப்பது இலக்குகளை வெற்றி கொள்ள உதவும்.**



ஒரு சராசரி இந்தியர் எங்கே மற்றும் ஏன் சேமித்து/முதலீடு செய்கிறார் என்பதை புரிந்து கொள்ளுவோம். மக்கள் தங்களுடைய பணத்தை குறுகிய கால தேவைகளுக்காக சேமிப்பு வங்கிக் கணக்கில் வைக்கிறார்கள், இங்கு முக்கிய நோக்கம் மூலதனத்தை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதுதான். அடுத்து மக்கள் நிலையான வைப்புகள் அல்லது அஞ்சல் அலுவலகத் திட்டங்களில் லாபங்களைப் பெருக்குவதற்காக சேமித்து வைக்கிறார்கள். மூன்றாவது பொதுவான முதலீட்டு மார்க்கம் ரியல் எஸ்டேட் மற்றும் தங்கம். இங்கு முக்கிய நோக்கம் மூலதன வளர்ச்சி. விரிவாகக் கூறுமிடத்து நீங்கள் கீழ்க்கண்ட காரணங்களில் ஒன்றிற்காக நீங்கள் சேமித்து/முதலீடு செய்து வைக்கிறீர்கள் :

1) மூலதனம் பாதுகாத்தல்
2) வருவாய் உருவாக்குதல்
3) மூலதன வளர்ச்சி

மேலுள்ள மூன்று நிலைகளிலும் தெளிவாக தெரிவது மியூசுவல் ஃபண்ட்ஸ் எல்லாவற்றிற்கும் பொருந்துகிறது இதை இன்னும் எளிய முறையில் புரிந்து கொள்ளுவோம்  மியூசுவல் ஃபண்டுகள் வெவ்வேறு வகை அடிப்படைகள் கொண்டது, அதன் அமைப்பு, அங்கங்கள் மற்றும் முதலீட்டு நோக்கங்கள் முதலியன. இந்த வேறுபாடுகள் வெவ்வேறு வகை தேவைகளை நிறைவேற்றுகிறது.

# முதலீட்டு இலக்குகள்

| | | | |
|---|---|---|---|
| **மூலதன பாதுகாப்பு** | **சேமிப்பு வங்கி கணக்கு** | **பிபிஎஃப்** | **மியூசுவல் ஃபண்ட்** |
| **வருவாய் உருவாக்கல்** | **நிலையான வைப்புகள்** | **பிஓ - எம்ஐஎஸ்** | **மியூசுவல் ஃபண்ட்** |
| **மூலதன வளர்ச்சி** | **ரியல் எஸ்டேட்** | **தங்கம்** | **மியூசுவல் ஃபண்ட்** |

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

# உங்களுடைய வகை என்ன?



சுரேஷ் ஒவ்வொரு மாதமும் 30 அன்று அவருடைய சம்பளத்தை வாங்குகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அவருடைய சம்பளத்தின் 40% வீட்டுக்கடன் மாதத் தவணைக்கு செலுத்துகிறார் மற்றும் இந்த மாதத் தவணை ஒவ்வொரு மாதத்தின் 10 அன்று செலுத்த வேண்டும், அல்லது சுரேஷ் தனது எதிர்பாராச் செலவு நிதியில் வைத்துவிடுகிறார். இந்த பணம் வங்கியில் இருக்கிறது மற்றுமக் 4%ஆ.ஒ. வீதம் சொற்ப வட்டியை ஈட்டுத் தருகிறது. இருப்பினும், சுரேஷ் அவர்களுக்கு ரொக்கமாக்கிக் கொள்ளுவதன் கூட மிகமுக்கியமான ஒன்றாக பாதுகாப்பும் அளிக்கத்தக்க ஒரு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. சுரேஷும் அதைதாதான் விரும்புவார். இவ்விதமாக நீங்கள் குறுகிய காலத்திற்கு சேமிக்க வேண்டும் என்று விரும்பினால், லிக்விட் மியூசுவல் ஃபண்ட் எனப்படும் மியூசுவல் ஃபண்ட் வகையில் முதலீடு செய்யலாம்.

## லிக்விட் மியூசுவல் ஃபண்ட்

நிதிசார் விதிமுறைகளில் 'லிக்விட்' என்னும் நிதியை புரிந்துகொள்ள முயன்றால், கையில் ரொக்கப் பணம் போன்று ஒரு சொத்து என்று பொருள்படும். லிக்விட் மியூசுவல் ஃபண்ட்ஸ் குறைந்த ஆபத்துக்களுடையது மற்றும் சேமிப்பு கணக்கைவிட சற்று அதிகமான லாபம் அளிக்ககக் கூடியதாகும்.. இந்த ஃபண்டுகள் குறைந்த ஆபத்துடைய முதலீட்டு வாய்ப்புகளில் முதலீடு செய்யப்படுகிறது. இப்போது, 'வருவாய் உருவாக்கும்' இதர முதலீட்டு நோக்கங்களை கருத்தில் கொள்ளுவோம். முன்பு கூறியவாறு, நம்மில் பெரும்பாலானவர்கள் நிரந்தர வைப்பு நிதியிலோ அல்லது அஞ்சல் அலுவலக சேமிப்புத் திட்டங்களிலோ முதலீடு செய்ய விரும்புகிறோம். 'மக்கள் ஏன் அங்கு முதலீடு செய்கிறார்கள்?' என்று கேள்வி எழுப்பினால், கிடைக்கக்கூடிய பதில் ஒருவருக்கு அவசரமாக தேவை என்னும்போது உடனடியாக கிடைக்காமல் இருக்கலாம், என்றாலும், இது பாதுகாப்பானது மற்றும் நியாயமான லாபம் கிடைக்கிறது என்பதாகும். அடிப்படையில் இங்கு தேவை என்னவெனில், முன்பு கூறியவாறு இது ஒரு பாதுகாப்பான சாதனமாகும் மற்றும் நியாயமான லாபத்தை வழங்குகிறது. இந்த வகைப் பிரிவில் சரியான பொருத்தமான ஒன்று டெப்ட் மியூசுவல் ஃபண்ட்.

# முதலீட்டு இலக்குகள்

| | | | |
|---|---|---|---|
| மூலதன பாதுகாப்பு | சேமிப்பு வங்கி கணக்கு | பிபிஎஃப் | லிக்விட் ஃபண்ட் |
| வருவாய் உருவாக்கல் | நிலையான வைப்புகள் | பிஓ - எம்ஐஎஸ் | டெப்ட் ஃபண்ட் |
| மூலதன வளர்ச்சி | ரியல் எஸ்டேட் | தங்கம் | ஈக்விட்டி ஃபண்ட் |

## டெப்ட் மியூசுவல் ஃபண்ட்ஸ்:

டெப்ட் ஃபண்டுகள் குறைந்த ஆபத்துடைய பஃண்டாகும். அவர்களுடைய குறிக்கோள் உங்களுடைய மூலதனத்தை பாதுகாக்கும் அதே வேளையில், நிலையான வருவாயை உருவாக்குவதாகும்; இந்த சிறப்பம்சம் உங்களுடைய முதலீட்டு போர்ட்ஃபோலியோவிற்கு உறுதியை அளிக்க உதவுகிறது. எல்லா மியூசுவல் ஃபண்டுகளுமே சில ஆபத்துக்களை கொண்டவை தான் என்றாலும், இவை லிக்விட் ஃபண்டுகளைவிட சற்று ஆபத்து அதிகமானவை. இவை பொதுவாக அரசு பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகிறது மற்றும் நிலையான வட்டி அளிக்கக்கூடிய கார்ப்பொரேட்களுக்கு (பெரும் நிறுவனங்கள்) பணத்தை கடனாக கொடுத்து உதவுகிறது. எனவே நீங்கள் ஒரு நடுத்தர காலவரை ஃபண்டைக் காட்டிலும் டெப்ட் ஃபண்டுகளைவிட சற்று அதிகமாக லாபம் எதிர்பாப்பீர்களேயானால் டெப்ட் ஃபண்டுகளில் முதலீடு செய்வது உகந்தது. டெப்ட் மியூசுவல் ஃபண்டுகள் சற்று மிதமான ஆபத்து கொண்டவையாகும்.

டெப்ட் : அதாவது ஒரு நிலையான லாப விகிதத்தில் (வட்டி விகிதத்தில்) பணத்தை கடனாக கொடுத்தல்/வாங்குதல். அதாவது டெப்ட்-ல் முதலீடு செய்வது என்பது ஒரு நிலையான வட்டி விகிதத்தில் நிறுவனங்களுக்கோ அல்லது அரசுக்கோ கடனாக வழங்குதல் ஆகும்.




தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.



## ஈக்விட்டி மியூசுவல் ஃபண்ட்ஸ்:

ஈக்விட்டி ஃபண்ட்ஸ் இதர ஃபண்ட் வகைகளைக் காட்டிலும் ஆபத்தானதாக கருதப்படுகிறது, ஆனால் மேலும் அவை இதர ஃபண்டுகளைக்காட்டிலும் அதிக லாபத்தை அளிக்கிறது. இந்த ஃபண்டுகள் நிறுவனங்களின் ஈக்விட்டியில் முதலீடு செய்யப்படுகிறது, அதாவது பங்குகளை (பகுதி உடமை) வாங்குகிறது. இவ்விதமாய் நிறுவனத்தின் ஓர் உரிமையாளராக லாபம் நிறுவனத்தின் செயல்திறனுடன் தொடர்புடையதாகும். அதாவது ஆபத்து சற்று அதிகமானதாகும். இருப்பினும், பல்வகைப்படுத்தல் காரணமாக அதாவது பல நிறுவனங்களில் முதலீடு செய்வதன் காரணமாக ஆபத்து குறைக்கப்படுகிறது. மேலும் நீண்ட காலப் போக்கில் ஆபத்து பரவலாக்கப்படுகிறது, லாபத்தின் ஏற்ற இறக்கம் சமன் படுத்தப்படுகிறது. மூலதன வளர்ச்சி மூலம் செல்வம் உருவாக்க நினைக்கும் ஒரு முதலீட்டாளருக்கு நீண்ட காலவரை கொண்ட ஓர் ஈக்விட்டி ஃபண்டில் முதலீடு செய்வது உகந்தது. ஒரு முதலீடாக ஈக்விட்டி இதர அனைத்து முதலீட்டு வகைகளைக் காட்டிலும் சிறந்து விளங்குவதாக சரித்திரம் எடுத்துக்காட்டுகிறது.

இருப்பினும், முன்பு கூறியவாறு அனைத்து வகை முதலீட்டாளர்களுக்கும் ஏற்ற வகையில் மியூசுவல் ஃபண்டுகள் கிடைக்கின்றன. இவ்வாறு ஒரு முதலீட்டாளர் ஈக்விட்டிகள் அதேபோல் டெப்ட் மியூசுவல் ஃபண்டிலும் முதலீடு செய்ய விரும்பினால், அதற்கென ஹைப்ரிட் மியூசுவல் ஃபண்ட்ஸ் எனப்படும் ஒரு வகை இருக்கிறது.

ஈக்விட்டி : ஈக்விட்டியை உடைமை கொண்டாடுவது என்பது, நிறுவனத்தில் ஒரு பங்காளராக விளங்குதல் மற்றும் பங்காளரின் லாபம் வரம்பற்றதாகும், இருப்பினும் நஷ்டமும் கூட வரம்பற்றதாகும். இவ்விதமாக, ஈக்விட்டி முதலீடுகள் அதிக ஆபத்து அதிக லாபம் வகையின் கீழ் அமைகிறது.

## ஹைப்ரிட் மியூசுவல் ஃபண்ட்ஸ்:

ஹைப்ரிட் (கலப்பினம்) பெயருக்கு ஏற்றவாறு இது டெப்ட் மற்றும் ஈக்விட்டி ஃபண்டுகளின் ஒரு கலவை; ஹைப்ரிட் ஃபண்ட்ஸின் போர்ட்ஃபோலியோவுக்குள் ஈக்விட்டிகள், டெப்ட்ஸ் மற்றும் மணி மார்க்கெட் செக்யூரிடீஸ் இவைகளின் கலவை அடங்கும். ஈக்விட்டி மற்றும் டெப்ட்-ன் கலவைக்கு ஏற்ப பலவகையான ஹைப்ரிட் ஃபண்டுகள் உள்ளன. உங்களுடைய ஆபத்து தாங்கு திறன் பொறுத்து உங்களுடைய போர்ட்ஃபோலியோவுக்குள் ஹைப்ரிட் மியூசுவல் ஃபண்டுகளை சேர்த்துக் கொள்ளலாம். இவ்வகை ஃபண்டுகள் ஒரு 100% ஈக்விட்டி ஃபண்டைக் காட்டிலும் குறைந்த ஆபத்து கொண்டவை, காரணம் டெப்ட் ஃபண்ட் பகுதிப் பொருளினால் வழங்கப்படும் பாதுகாப்பு வலை, இவ்வகை மியூசுவல் ஃபண்ட் வகைகளுக்கு ஓர் அங்கமாக விளங்குகிறது. மியூசுவல் ஃபண்ட்ஸ் கருத்தாக்கம் மற்றும் மியூசுவல் ஃபண்டுகளின் வகைகளைப் புரிந்துகொண்ட பிறகு, எங்கு மற்றும் எவ்வாறு வாங்குவது என்பது குறித்து விவாதிக்கும் முன்பாக மற்றுமொரு முக்கியமான கருத்தை புரிந்துகொள்ள வேண்டும், அதுதான் என்ஏவி.



# கட்டுக்கதை

ஒரு மியூசுவல் ஃபண்ட் என்பது ஓர் ஈக்விட்டி தயாரிப்பு.

# உண்மை

மக்கள் ஃபண்ட்ஸ் என்ற உடனேயே மியூசுவல் ஃபண்ட் மட்டுமே நினைக்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் மியூசுவல் ஃபண்ட் எந்த ஒரு பயணியையும் சுமந்து செல்லும் ஒரு வாகனம். ஈக்விட்டி மியூசுவல் ஃபண்ட்ஸ் பங்கு சந்தைகளிலிருந்து பங்குகளை வாங்கும் மற்றும் அரசாங்க பாண்டுகள், கார்ப்பொரேட் டிபெஞ்சர்கள் மற்றும் டிரஷரி பில்ஸ் போன்ற டெப்ட் புராடக்ட்களை வாங்கும். ஒவ்வொரு வகை ஃபண்டின் ஆபத்து ஊர்தியினால் ஏற்றிச் செல்லப்படும் பயணியைச் சார்ந்தது.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

# நிகர சொத்து மதிப்பு



என்ஏவி என்பது நெட் அசெட் வேல்யூ (நிகர சொத்து மதிப்பு) என்பதன் சுருக்கம். ஒவ்வொரு பங்கிற்கும் ஒரு விலை உள்ளதுபோல், ஒவ்வொரு மியூசுவல் யூனிட்டிற்கும் ஒரு விலை உண்டு. அதாவது, என்ஏவி ஒரு ஃபண்டின் யூனிட் ஒன்றின் சந்தை மதிப்பைக் குறிக்கிறது. இந்த விலையில்தான் ஒரு முதலீட்டாளர் ஃபண்ட் யூனிட்களை வாங்கவோ/ விற்கவோ செய்கிறார். மியூசுவல் ஃபண்ட்ஸ் பொறுத்தவரை சொத்தின் மதிப்பு என்பது பொறுப்புகளை கழித்துக் கொண்ட பின் ஃபண்ட் போர்ட்ஃபோலியோவின் மொத்த மதிப்பு ஆகும். இந்த சொத்தின் மதிப்பு குறிப்பிட்ட ஃபண்டின் என்ஏவியாக குறிக்கப்பெற்ற நிலுவையில் உள்ள யூனிட்களின் எண்ணிக்கையால் வகுக்கப்படும். பொதுவாக இந்த என்ஏவி தினசரி அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

என்ஏவி எந்த ஒரு நாளிலும் ஃபண்டினால் கொள்ளப்பட்டிருக்கும் பங்குகள்/ பாண்டுகள்/செக்யூரீடீஸ்களின் சந்தை மதிப்பை பிரதிபலிக்கிறது. ஒரு ஃபண்ட் தனது போர்ட்ஃபோலியோவில் பலவிதமான பங்குகளை கொண்டுள்ளதால், என்ஏவி போர்ட்ஃபோலியோ மீதான கூட்டு லாபத்தை மட்டும் பிரதிபலிக்கிறது. நீங்கள் முதலீடு செய்ய திட்டமிட்டிருக்கும் திட்டத்தின் என்ஏவியின் மதிப்பு ரூ.15 அல்லது ரூ.150 என்பது பற்றி கவலை இல்லை. ஒட்டுமொத்த இருப்பு 10% வளர்ச்சி அடையுமானால், ரூ.15 என்ஏவி  ரூ.16.5 ஆகும் மற்றும் ரூ.150 என்ஏவி ரூ.165 ஆகும். ஆகவே நீங்கள் முதலீடு செய்யும் என்ஏவி, உங்கள் முதலீடு உங்களுக்கு 10% லாபத்தை பெற்றுத் தருகிறது. எனவே ‘குறைந்த’ என்ஏவி மற்றும் யூனிட்களின் அதிக எண்ணிக்கை மீது கவனம் செலுத்துவதற்கு பதிலாக, போர்ட்ஃபோலியோ லாபத்தை உறுதிப்படுத்தும் இதர இதர காரணிகள் (செயலாற்றல் தடப் பதிவு, ஃபண்ட் நிர்வாகம், ரொக்கமாக்கும்தன்மை) கருத்தில் கொள்வது மதிப்பு மிக்கதாகும். அதிக என்ஏவி கொண்ட ஒரு ஃபண்ட் ஒரு குறைந்த என்ஏவி கொண்ட ஒரு ஃபண்டைவிட, அதன் இருப்புகள் (பங்குகள்/ பாண்டுகள்/ செக்யூரிடீஸ்) நன்கு செயல்திறன் கொண்டவையாக இருப்பின் அதிக லாபத்தை அளிக்கலாம்.



# கட்டுக்கதை

ரூ.10 என்ஏவி கொண்ட ஒரு மியூசுவல் ஃபண்ட் என்பது ரூ.25 என்ஏவி கொண்ட ஒரு மியூசுவல் ஃபண்ட் திட்டத்தைவிட சிறந்தது.

# உண்மை

இது முதலீட்டாளர்களிடையே தொடர்ந்து நீடித்து இருந்து கொண்டிருக்கும் நம்பிக்கை. உண்மை என்னவெனில் முதலீடு செய்யப்படும் ஃபண்டுகள் மீது கிடைக்கும் லாப சதவீதமே முக்கியமானதாகும், இது கண்டு கொள்ளப்படாமல் தவறவிடப்பட்டுவிடுகிறது. எடுத்துக்காட்டாக, 10% வளர்ச்சி செயலாற்றல் கொண்டது, ரூ.10 என்ஏவி ரூ.11 க்கு உயரும் அதேபோல் ரூ.200 என்ஏவி ரூ.220 க்கு உயரும். இந்த சாதாரண உண்மை சொல்லப்படவும் இல்லை அல்லது கேட்டறியப்படவும் இல்லை. உண்மையில், ஏற்கனவே விளக்கி கூறப்பட்டுள்ளபடி ரூ.200 திட்டத்தின் 10% வளர்ச்சி வாய்ப்பு என்பது ஒருவர் தனது ஆட்டத்தை துவங்கியவரைவிட அதிகமானதாகும்.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

# நீண்ட கால முன்னோக்கத்தின் சக்தி

நீண்ட கால முதலீடு செய்வதன் கருத்தாக்கம் எப்போதும் ஒரு பனிப்பந்துடன் ஒப்பிடப்படுகிறது, அது உருள உருள வளர்ந்துகொண்டே இருக்கிறது. அவ்வாறே, முதலீடு எவ்வளவு சிறியதாக இருந்தாலும், உங்களுடைய பணம் காலப்போக்கில் அதிக பணத்தை ஈர்த்து வளர்ச்சி அடைகிறது. இந்த விளைவு மேலும் அதிகரிக்கச் செய்வதன் சக்தி என்று அழைக்கப்படுகிறது. வலதுபக்கம் விளக்கியுள்ளபடி, 8% வட்டி வீதம் ஒவ்வொரு மாதமும் முதலீடு செய்யப்பட்ட ரூ.1000 என்னும் சிறிய தொகை மிக நல்ல லாபத்தை ஈட்டித்தருகிறது. உண்மையில், காலப்போக்கில் ஒரு சிறிய பங்களிப்பின் வளர்ச்சி உங்களுடைய எதிர்கால தேவைகளை சௌகரியமாக பராமரித்துக் கொள்ள ஏதுவாக்கும். சிறிய பங்களிப்புகள் தவிர முக்கியமானது என்னவென்றால் நீங்கள் உண்மையான இலக்குகளை அமைத்துக் கொள்ளவும் மற்றும் உங்கள் முதலீடுகளை அவற்றை நிறைவேற்றிட சற்று பொறுமையை கடைபிடிக்கவும்.






**கூட்டுசேர்க்கப்படுவதன் சக்தி**

- இது ‘‘கூட்டுசேர்க்கப்படுவதன் சக்தி’’யை விளக்குவதற்காக அனுமானமான விளக்கம், ஒருவர் 8% வட்டி வீதத்தில் ஒவ்வொரு மாதமும் ரூ.1000 சேமிப்பதாக அனுமானிக்கப்பட்டது.
- கடந்தகால செயலாற்றல் எதிர்காலத்தில் நிலைநிறுத்தப்படாமல் போகலாம்.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

# முன்னதாக ஆரம்பித்தல் நல்ல பலனை அளிக்கிறது

நீண்ட காலத்திற்கு முதலீடு செய்தவண்ணம் இருப்பது முக்கியானது, ஆனால் முடிவான லாபத்தை அதிகரிக்கச் செய்ய நீங்கள் முன்னதாக ஆரம்பிக்க வேண்டியுது முக்கியமானதாகும். கீழே குறிக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டு, முன்னதாக ஆரம்பிப்பதன் நன்மைகளை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ரவியும் சசியும் 8% ஆ.ஒ. வீதம் ஈட்டும் வகையில் பிரதி மாதம் ரூ.2000 முதலீடு செய்ய ஆரம்பித்தார்கள். இதில் என்ன வித்தியாசம் என்றால் ரவி 25 வயதில் முதலீடு செய்ய ஆரம்பித்தார், சசி 35 வயதில் முதலீடு செய்ய ஆரம்பித்தார்.. 5 ஆண்டு காலத்தில் அவர்கள் இருவரும் ரூ.1.2 லட்சம் முதலீடு செய்கின்றனர் மற்றும் அவர்கள் 60 வயது ஆகும் வரை தங்களுடைய முதலீடுகளை பிடித்து வைத்திருந்தார்கள். ரவியின் முதலீடு ரூ. 14,08,551 ஆக வளர்ச்சி அடைகிறது, அதே நேரத்தில் சசியின் முதலீடு ரூ.5,68,999 ஆக மட்டும் வளர்ச்சி அடைகிறது. இங்கு வலியுறுத்தப்பட வேண்டிய விஷயம் - அதிக காலவரை, அதிக லாபம்.






• இது ''கூட்டுசேர்க்கப்படுவதன் சக்தி''யை விளக்குவதற்காக அனுமானமான விளக்கம், ஒருவர் 8% வட்டி வீதத்தில் ஒவ்வொரு மாதமும் ரூ.2000 சேமிப்பதாக அனுமானிக்கப்பட்டது.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

# இதோ எவ்வாறு முதலீடு செய்வது

எங்கே முதலீடு செய்வது, எவ்வாறு முதலீடு செய்வது என்று உங்களுக்கு தெரியவில்லை என்றால் இந்த அறிவு அனைத்தும் வீண்தான். அதற்கு முன்பாக முக்கியமானது என்னவென்றால் எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும்? இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பது உங்களுடைய இலக்குகளைப் பொறுத்தது. .முன்னம் விவாதித்தவாறு ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு இலக்குகள் இருக்கலாம், வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் இருக்கலாம். எனவே நபருக்கு நபர் எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும் என்பதில் மாறுபாடு இருக்கலாம். எடுத்துக்காட்டாக, இரண்டு குழந்தைகள் கொண்ட தம்பதியர் வேறுபட்ட பொறுப்புகளைக் கொண்டவர்களாக இருக்கலாம், அதேபோல் பணி ஓய்வு பெற்ற தம்பதியர் நிறைவேற்ற வெவ்வேறு இலக்குகளைக் கொண்டு  வேறுபட்ட முன்னுரிமைகளைக் கொண்டவர்களாக இருக்கலாம், எனவே எவ்வளவு வாங்க வேண்டும்? என்ற கேள்விக்கு இடமில்லை. முக்கியமான கேள்வி எவ்வாறு வாங்குவது? என்பதுதான்.

ஒவ்வொருவரும் தங்களுடைய நிதிசார் இலக்குகளை மிகத் தெளிவாக வரையறுத்துக் கொள்ள வேண்டும், இது திட்டமிடுதல் என்றும் அழைக்கப்படுகிறது. பின்னர் இலக்குகளைப் பொறுத்து மற்றும் இடர் தாங்கு திறன் பொறுத்து அடையாளம் காண வேண்டும். பிறகுதான் மியூசுவல் ஃபண்டுகளை மதிப்பீடு செய்ய வேண்டும். நீங்கள் அவற்றை ஆன்லைன் அல்லது ஆஃப்லைன் மூலம் வாங்கலாம். ஆன்லைன் மூலம் எனின் நேரடியாக அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனியின் (ஏஎம்சி அதாவது மியூசுவல் ஃபண்ட் கம்பெனி) இணையதளம் மூலம் அல்லது மியூசுவல் ஃபண்டுகளில் முதலீடு செய்வதற்காக ஆன்லைன் தளம் வழங்கும் (உ.ம். வங்கிகள், பங்கு தரகர்கள் முதலானவர்கள்) எந்த வினியோக பங்காளர் மூலம் அல்லது உள்ளூர் நிதிசார் வினியோகஸ்தர்/ஆலோசகரை அழைத்து/அணுகி தேவையான படிவத்தை நிரப்பி அதை தேவையான ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பிக்கலாம். இதை செய்து முடிக்க நிதிசார் வினியோகஸ்தர் உங்களுக்கு உதவுவார். ஒருமுறை ஏஎம்சி (மியூசுவல் ஃபண்ட் கம்பெனி)  உங்களுடைய படிவத்தை ஏற்றுக்கொண்டு உங்களுடைய பணச் செலுத்தம் நிறைவேறிவிட்டால், நீங்கள் மியூசுவல் ஃபண்ட் பாதையில் உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் தயாராகிவிட்டீர்கள்.

ஈக்விட்டி டெப்ட் ரொக்கப் பணம்

## மணமாகாதவர்






## இளம் தம்பதியர் குழந்தைகளுடன்






## பணிஓய்வு பெற்றவர்






இது ஓர் எடுத்துக்காட்டு. உங்கள் போர்ட்ஃபோலியோவில் பொருத்தமான முதலீட்டுக் கலவை பரிந்துரைக்க பல மாடல்கள் உள்ளன. வயது மற்றும் குடும்ப அளவு தவிர பற்பல வேறுபாடுகள் உள்ளதால், சரியான போர்ட்ஃபோலியோவை தேர்வு செய்ய தொழில்ரீதியான நிதிசார் திட்ட ஆலோசகரை கலந்தாலோசியுங்கள்.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

# இதோ, நீங்கள் யாரை கலந்தாலோசிக்க வேண்டும்



தோராயமாக கிட்டத்தட்ட 1 லட்சம் நேரடியாக அங்கீகாரம் பெற்ற வினியோகஸ்தர்கள் நாடெங்கிலும் மியூசுவல் ஃபண்டுகளை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இருப்பினும், பல வங்கிகள் மியூசுவல் ஃபண்டுகளின் வினியோகஸ்தர்களாய் இருப்பதால் மியூசுவல் ஃபண்டிற்காக உங்களுக்கு உதவக்கூடியவர்களின் மொத்த எண்ணிக்கை மிகப் பெரியதாகும். மேலும் சில பெரிய வினியோகஸகதர்கள் இந்தியா முழுவதும் பெரிய அளிவிலான விற்பனைக் குழுவைப் பெற்றிருக்கிறார்கள்.

**இந்தியாவில் மியூசுவல் ஃபண்ட் நிறுவனங்களின் இணையதள முகவரி மற்றும் தொடர்பு எண்**

| ஏஎம்சி-யின் பெயர் | இணையதளம் | கட்டணமில்லா எண் |
|---|---|---|
| • ஏஐஜி குளோபல் அசெட் மேனேஜ்மெண்ட் கோ. (இந்தியா) பிரை. லிட். | aiginvestments.co.in | 1800 200 3444 |
| • ஆக்ஸிஸ் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிட். | axismf.com | 1800 3000 3300 |
| • பரோடா பயோனீர் அசெட் மேனேஜ்மெண்ட் கோ. லிட். | barodapioneer.in | 1800 419 0911 |
| • பெஞ்சுமார்க் அசெட் மேனேஜ்மெண்ட் கோ. பிரை. லிட். | benchmarkfunds.com | 1800 22 5079 |
| • பாரதி ஏஎக்ஸ்ஏ இன்வெஸ்ட்மெண்ட் மேனேஜர்ஸ் பிரை. லிட். | bhartiaxa-im.com | 1800 103 2263 |
| • பிர்லா சன் லைஃப் அசெட் மேனேஜ்மெண்ட் கோ. லிட். | birlasunlife.com | 1800 270 7000<br>1800 22 7000 |
| • பீஎன்பி பாரிபாஸ் மியூசுவல் ஃபண்ட் | bnpparibasmf.in | 022 33704000 |

| ஏஎம்சி-யின் பெயர் | இணையதளம் | கட்டணமில்லா எண் |
|---|---|---|
| • கனரா ரொபெகோ அசெட் மேனேஜ்மென்ட் கோ. லிட். | canararobeco.com | 1800 209 2726 |
| • டாய்வா அசெட் மேனேஜ்மென்ட் (இந்தியா) பிரை. லிட். | daiwafunds.in | 1800 419 5000 |
| • டாய்ஸ்சு அசெட் மேனேஜ்மென்ட் (இந்தியா) பிரை. லிட். | dws-india.com | 1800 209 5005 |
| • டிஎஸ்பி பிளாக்ராக் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜர்ஸ் லிட். | dspblackrock.com | 1800 200 4499 |
| • ஈடெல்வீஸ் அசெட் மேனேஜ்மென்ட். லிட். | edelweissmf.com | 1800 425 0090 |
| • எஸ்கார்ட் அசெட் மேனேஜ்மென்ட். லிட். | escortsmutual.com | 011 4358 7420/ 4358 7415 |
| • ஃபில் ஃபண்ட் மேனேஜ்மென்ட் பிரை. லிட். | fidelity.co.in | 1800 2000 400/ 1800 180 8000 |
| • ஃப்ராங்க்ளின் டெம்பிள்டன் அசெட் மேனேஜ்மென்ட் (இந்தியா) பிரை. லிட். | franklintempletonindia.com | 1800 425 4255/ 60004255 |
| • கோல்டுமேன் ஸாச் அசெட் மேனேஜ்மென்ட் (இந்தியா) பிரை. லிட். | gsam.in | 022 66279032 |
| • ஹெச்டிஎஃப்சி அசெட் மேனேஜ்மென்ட் கோ. லிட். | hdfcfund.com | 1800 233 6767 |
| • ஹெச்எஸ்பிசி அசெட் மேனேஜ்மென்ட் (இந்தியா) பிரை. லிட் | assetmanagement.hsbc.com | 66145000 |
| • ஐசிஐசிஐ புருடென்ஷியல் அசெட் மேனேஜ்மென்ட் கோ. லிட் | icicipruamc.com | 1800 222 999/ 1800 200 6666 |
| • ஐடிபிஐ அசெட் மேனேஜ்மென்ட் லிட் | idbimutual.co.in | 1800 22 4324 |
| • ஐடிஎஃப்சி அசெட் மேனேஜ்மென்ட் கோ. பிரை. லிட் | idfcmf.com | 1800 22 6622 |
| • இந்தியா இன்ஃபோலைன் அசெட் மேனேஜ்மென்ட் கோ. லிட். | iiflmf.com | 1800 200 2267 |
| • ஐஎன்ஜி இன்வெஸ்ட்மென்ட் மேனேஜ்மென்ட் (இந்தியா) பிரை. லிட். | ingim.co.in | 1800 22 0042 |
| • ஜேஎம் ஃபைனான்ஷியல் அசெட் மேனேஜ்மென்ட் பிரை. லிட். | jmfinancialmf.com | 1800 1038 345 |

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

| ஏஎம்சி-யின் பெயர் | இணையதளம் | கட்டணமில்லா எண் |
|---|---|---|
| • ஜேபி மோர்கன் அசெட் மேனேஜ்மென்ட் இந்தியா பிரை. லிட். | jpmorganmf.com | 1800 22 5763 |
| • கோட்டக் மஹிந்திரா அசெட் மேனேஜ்மென்ட் கோ. லிட். | kotakmutual.com | 1800 22 2626 |
| • எல்ஐசி மியூசுவல் ஃபண்ட் அசெட் மேனேஜ்மென்ட் கோ. லிட். | licnomuramf.com | 022 220 42450 |
| • எல்-டி இன்வெஸ்ட்மென்ட் மேனேஜ்மென்ட் லிமிடெட் | lntmf.com | 1800 209 6565 |
| • மிரே அசெட் குளோபல் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜ்மென்ட் (இந்தியா) பிரை. லிட். | miraeassetmf.co.in | 1800 1020 777 |
| • மோர்கன் ஸ்டான்லி இன்வெஸ்ட்மென்ட் மேனேஜ்மென்ட் பிரை. லிட். | morganstanley.com | 1800 425 1313 |
| • மோதிலால் ஓஸ்வால் அசெட் மேனேஜ்மென்ட் கோ. லிட். | motilaloswal.com | 1800 200 6626 |
| • பியர்லெஸ் ஃபண்ட்ஸ் மேனேஜ்மென்ட் கோ. லிட். | peerlessmf.co.in | 1800 200 9995 |
| • பிரமெரிக்கா அசெட் மேனேஜர்ஸ் பிரை. லிட். | pramericamf.com | 1800 266 2667 |
| • பிரின்சிபல் பிஎன்பீ அசெட் மேனேஜ்மென்ட் கோ. பிரை. லிட். | principalindia.com | 1800 425 5600 |
| • குவான்டம் அசெட் மேனேஜ்மென்ட் கோ. பிரை. லிட். | quantumamc.com | 1800 22 3863 |
| • ரிலையன்ஸ் கேபிடல் அசெட் மேனேஜ்மென்ட் லிட். | reliancemutual.com | 1800 300 11111 |
| • ரெலிகர் அசெட் மேனேஜ்மென்ட் கோ. பிரை. லிட். | religaremf.com | 1800 209 0007 |
| • சஹாரா அசெட் மேனேஜ்மென்ட் கோ. பிரை. லிட். | saharamutual.com | 022 67520121/27 |
| • எஸ்பிஐ ஃபண்ட்ஸ் மேனேஜ்மென்ட் பிரை. லிட். | sbimf.com | 1800 425 5425 |
| • சுந்தரம் பீஎன்பி பாரிபாஸ் அசெட் மேனேஜ்மென்ட் கோ. லிட். | sundarammutual.com | 1800 425 7237 |



| ஏஎம்சி-யின் பெயர் | இணையதளம் | கட்டணமில்லா எண் |
|---|---|---|
| • டாடா அசெட் மேனேஜ்மென்ட் லிட். | tatamutualfund.com | 1800 209 0101 |
| • டாரஸ் அசெட் மேனேஜ்மென்ட் கோ. லிட். | taurusmutualfund.com | 022 66242700 |
| • யூனியன் கேபிசி அசெட் மேனேஜ்மென்ட் கோ. பிரை. லிட். | unionkbc.com | 1800 200 2267 |
| • யூடிஐ அசெட் மேனேஜ்மென்ட் கோ. லிட். | utimf.com | 1800 22 1230 |

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

நிதிசார் இலக்குகள்

▼

கண்டறிவீர் ‘என்ன வாங்க வேண்டும்’

▼

பல்வேறு மியூசுவல் ஃபண்ட் கம்பெனிகளிலிருந்து ஃபண்டுகளை மதிப்பீடு செய்யவும்

▼

ஆன்லைன் | ஆஃப்லைன்

▼ ▼

மியூசுவல் ஃபண்ட் கம்பெனி | நிதிசார் வினியோகஸ்தர்

▼ ▼

படிவத்தை நிரப்பவும்

▼ ▼

சம்பந்தப்பட்ட ஆவணங்களை இணைக்கவும்

▼ ▼

சமர்ப்பிக்கவும்





# கட்டுக்கதை

மியூசுவல் ஃபண்டில் முதலீடு செய்வதற்கு உங்களுக்கு டிமேட் கணக்கு தேவை.

# உண்மை

மியூசுவல் ஃபண்ட்ஸ் ஆன்லைன் மூலமாகவோ அல்லது நேரடியாக ஏஎம்சி (மியூசுவல் ஃபண்ட் கம்பெனி) மூலமாகவோ அல்லது ஒரு தரகர் மூலமாகவோ வாங்கலாம். இருப்பினும், ஒருவர் ஒரு படிவத்தை நிரப்பி ஆஃப்லைன் மூலமாகவும் முதலீடு செய்யலாம். அருகமைந்த வினியோக பங்காளரை தொடர்பு கொள்ளலாம், அது ஒரு வங்கியாகவோ அல்லது தனிப்பட்ட நிதிசார் ஆலோசகராகவோ அல்லது மியூசுவல் ஃபண்ட்ஸ் விற்கும் பங்கு தரகராகவும் இருக்கலாம். ஒருவருக்கு டிமேட் கணக்கு இருந்தால், அவர்/அவள் டிமேட் வடிவில் மியூசுவல் ஃபண்ட்ஸ் வாங்கலாம் அல்லது அவர்கள் ஒரு படிவத்தை நிரப்பி ஆஃப்லைன் மூலமாகவும் வாங்கலாம்.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

# நீங்கள் முதலீடு செய்த பிறகு

ஒருமுறை நீங்கள் ஒரு மியூசுவல் ஃபண்ட் வாங்கிவிட்டால் நீங்கள் ஒரு அறிக்கையை பெறுவீர்கள். அதில் உங்களுடைய தனிப்பட்ட விவரங்கள், முதலீடு செய்யப்பட்ட தொகை, நடப்பு என்ஏவி, முதலிய விவரங்கள் அடங்கி இருக்கும்.இந்த அறிக்கை கணக்கு அறிக்கை என்று சொல்லப்படுகிறது. நீங்கள் முதலீடு செய்த சில நாட்களுக்கு பிறகு கணக்கு அறிக்கை மட்டும் பெறுவதில்லை, ஆனால் காலக்கிரம அடிப்படையில் புதுப்பிக்கப்பட்ட கணக்கு அறிக்கைகள் பெறுவீர்கள். இவ்வாறாக மியூசுவல் ஃபண்ட் ஹவுஸ் உங்களுக்கு புதுப்பிக்கப்பட்ட விவரங்களை அளித்துக் கொண்டே இருக்கிறது.

இப்போது நாம் பார்த்தது மியூசுவல் ஃபண்ட்ஸ் என்பது என்ன, அத்துடன் ஏன் மற்றும் எவ்வாறு முதலீடு செய்ய வேண்டும் என்பது பற்றியதாகும். நாம் மீண்டும் மீண்டும் விவாதித்த ஒரு முக்கியமான பகுதி முதலீடு என்பது எப்போது பொருளுடையதாக இருக்கிறது என்றால் பணம் ‘தேவைப்படுகின்ற’ போது அதை பயன்படுத்திக் கொள்ள முடிகிறதா என்பதாகும். எனவே இன்னும் முக்கியமானது பணம் ‘தேவைப்படுகின்ற’ போது அதை எவ்வாறு திரும்பப் பெற்றுக் கொள்வது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இது மிகவும் சுலபமானது, நீங்கள் ஒரு படிவத்தில் கையொப்பமிட்டு அதை ஏஎம்சி (மியூசுவல் ஃபண்ட் கம்பெனி) க்கு சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இப்போதுதான் பல கேள்விகள் எழுகின்றன. ஒருவர் இதை எவ்வாறு செய்வது? இதை நாம் விவரமாக புரிந்து கொள்ளுவோம்.

**பணத்தை திரும்பப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கும் செய்முறையை மீட்பு எனப்படுகிறது. இந்த மீட்புப் படிவத்தை ஆன்லைன் அல்லது ஆஃப்லைன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். ஆன்லைன் வசதி ஏஎம்சி-யின் இணையதளத்தில் கிடைக்கிறது, அல்லது ஏஎம்சி-யின் கிளை அலுவலகம் அல்லது ஒரு நிதிசார் வினியோகஸ்தரிடமிருந்து (இதற்கான பட்டியல் முன்னம் கொடுக்கப்பட்டுள்ளது) படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும். அது மட்டுமல்ல, நீங்கள் பெறும் ஒவ்வொரு கணக்கு அறிக்கையும் கீழ் பாகத்தில் மீட்பு படிவம் இருக்கும். ஒருவர் அதை நிரப்பி கையொப்பமிட்டு சமர்ப்பிக்க வேண்டும். திட்டம் குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாக பணம் உங்கள் வங்கிக் கணக்கில் இருக்கும், இருப்பினும் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு அதிகபட்சமாக 3 பணி நாட்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.**

**பொது பரிவர்த்தனை சீட்டு**
(மியூசுவல் ஃபண்ட் கம்பெனியின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவும் அல்லது அதை கிளை அலுவலகம் அல்லது ஒரு நிதிசார் வினியோகஸ்தரிடமிருந்து படிவத்தை பெற்றுக் கொள்ளவும்)

▼

**மீட்பு தேர்வு செய்யவும்**

▼

**பொருத்தமான விவரங்களை நிரப்பவும்**
(நீங்கள் பகுதி மீட்பு கூட செய்து கொள்ள முடியும்)

▼

**படிவத்தில் கையொப்பமிடவும்**
(யூனிட்களின் அனைத்து விண்ணப்பதாரர்களும் கையொப்பமிட வேண்டும்)

▼

**சமர்ப்பிக்கவும்**
(குறிப்பிட்ட மியூசுவல் ஃபண்ட் கம்பெனியின் கிளையில் படிவத்தை சமர்ப்பிக்கவும்)

▼

**உங்கள் வங்கிக் கணக்கில் பணம்**
(திட்டத்தில் குறிப்பிட்டுள்ள காலத்தின்படி பணம் உங்கள் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது)

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.



இப்போது சுரேஷ் செயல்பட்டதுபோல் நீங்கள் செயல்பட மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். நிதிசார் சந்தைகள் மற்றும் மியூசுவல் ஃபண்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வுடன் நேர்மறையான கருத்துக்கள் உங்களுக்கு விவரமாகி இருக்கலாம். சுருக்கமாக சொல்வதென்றால், நீங்கள் உங்களுடைய இலக்குகளை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும், பின்னர் முதலீட்டு சாதனத்தை தீர்மானித்துக்கொள்ள வேண்டும். உங்களுடைய இலக்குகள் மற்றும் தேவைகளைச் சார்ந்து தகுந்த மியூசுவல் ஃபண்டை தேர்வு செய்துகொள்ள வேண்டும். அவ்வளவுதான் மற்றவற்றை யாவும் மியூசுவல் ஃபண்ட் கம்பெனிகளால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படும்.

தயவுசெய்து மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள மியூசுவல் ஃபண்ட் அலுவலகம்/நிதிசார் வினியோகஸ்தருடன் (வங்கிகள்/தனிநபர் நிதிநிலை ஆலோசகர் முதலானோர்) தொடர்பு கொள்ளவும்.

அசோஸியேஷன் ஆஃப் மியூசுவல் ஃபண்ட்ஸ் இன் இந்தியா
ஒன் இந்தியாபுல்ஸ் சென்டர்,
டவர் 2, விங் ஆ, 701, 7வது தளம்,
841 சேனாபதி பாபட் மார்க்,
எல்ஃபின்ஸ்டன் ரோடு, மும்பை-400 013.
இணையதளம்: www.amfiindia.com